DFCC BANK
Keep Growing

# சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்குகள் முக்கிய தகவல்கள் ஆவணம்

2019

**DFCC வங்கி சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்குகள் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை**

நீங்கள் ஏற்கனவே எமது வங்கியில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான கணக்கொன்றை ஆரம்பித்திருந்தால் அல்லது அவ்வாறு செய்யத் திட்டமிட்டிருந்தால், அதன் மூலம் அதிகபட்ச அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள உதவும் வகையில் அக் கணக்கின் சிறப்பம்சங்களை உங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.


| இல. | தலைப்பு | பக்க இல. |
|---|---|---|
| **1.** | **சிரேஷ்ட பிரஜைகளுக்கான DFCC வங்கியின் சேமிப்புக் கணக்கு** | 4 |
| 1.1 | கருசரு சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான தகுதிகள் | 4 |
| 1.2 | ஆரம்ப வைப்பின் பெறுமதி | 5 |
| 1.3 | பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் மற்றும் மேலதிக வெகுமதிகள் | 5 |
| 1.4 | உங்கள் கணக்கை முகாமைத்துவம் செய்தல் | 5 - 7 |
| 1.5 | கணக்குப் புத்தகங்கள் | 7 - 8 |
| 1.6 | கருசரு சேமிப்புக் கணக்கிற்கான வட்டி | 8 |
| 1.7 | முதலீட்டிற்கான நியமன வசதி | 9 |
| 1.8 | விபரக்கூற்றுகள் | 9 |
| **2.** | **சிரேஷ்ட பிரஜைகளுக்கான DFCC வங்கியின் நிலையான வைப்புகள்** | |
| 2.1 | நிலையான வைப்புக் கணக்குகள் பற்றி | 10 |
| 2.2 | சிரேஷ்ட பிரஜைகள் நிலையான வைப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான தகுதி | 10 - 11 |
| 2.3 | நிலையான வைப்பு முதலீடுகளுக்கான நியமன வசதி i | 11 |
| 2.4 | நிலையான வைப்புக் கணக்கின் தனித்துவமான சிறப்பம்சங்கள் | 11 - 12 |
| 2.5 | நிலையான வைப்புக் கணக்குகளின் பேரில் திரளும் வட்டி | 12 |
| 2.6 | நிலையான வைப்புக் கணககின் மீதான வட்டிக் கொடுப்பனவு | 12 - 13 |
| 2.7 | நிலையான வைப்புக் கணக்கின் வட்டி மீதான இடைநிறுத்திவைக்கப்பட்ட வரி | 13 |

| | | |
|---|---|---|
| 2.8 | நிலையான வைப்பின் முதிர்ச்சி | 13 - 14 |
| 2.9 | நிலையான வைப்புக்களை முதிர்ச்சிக்கு முன் மீளப்பெறுதல் | 14 |
| 2.10 | நிலையான வைப்பிலுள்ள பணத்தை இடம்மாற்றும் மற்றும் மீளப்பெறும் முறைகள் | 14 |
| 2.11 | முதிர்ச்சியில் நிலையான வைப்பு விதிமுறைகளின் திருத்தம் | 15 |
| 2.12 | நிலையான வைப்புகளின் பேரில் கடன் வழங்குதல் | 15 |
| 2.13 | பாத்தியத்தின் கீழ் நிலையான வைப்பின் முன்கூட்டிய மூடுதல்/மூடுதல் | 15 |
| 2.14 | எம்முடன் தொடர்புகொள்ளும் முறை | 15 |

## 1. சிரேஷ்ட பிரஜைகளுக்கான DFCC வங்கியின் சேமிப்புக் கணக்கு

60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சிரேஷ்ட பிரஜைகளுக்கென, வழமையான வளர்ந்தோர் சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி வீதங்களைவிட கூடுதலான வட்டி வீதங்களை வழங்கும், ‘‘கருசரு சேமிப்புக் கணக்கு’’ என்ற கணக்கை DFCC வங்கி வழங்குகின்றது.

கருசரு சேமிப்புக் கணக்கு சராசரியைவிட கூடுதலான வட்டி வீதங்களை மாத்திரமன்றி, உங்கள் வாழ்க்கையை எளிதாக்குவதற்காக பல்வேறு வணிக நிறுவனங்களில் விலைக்கழிவுகள், ஊக்குவிப்புச் சலுகைகள் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் பலவற்றையும் வழங்குகின்றது.

### 1.1 DFCC கருசரு சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான தகுதிகள்

- இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும்
- 60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருக்க வேண்டும்.

*விசேட குறிப்பு:* ஒருவர் கருசரு சேமிப்புக் கணக்கை ஆரம்பித்த பின்னர் இலங்கையில் வதிவிடம் அற்றவராக மாறினால், அவரது கணக்கு மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாய்க் கணக்கு (CTRA) என்ற பிரிவுக்கு மாற்றப்படும். ஆகவே, அந்த மாற்றம் இடம்பெற்ற திகதியிலிருந்து அவர் கருசரு கணக்கிற்கான சன்மானங்கள்/ அனுகூலங்கள் எதனையும் பெறுவதற்கான தகுதியை இழப்பார்.

**புதிய வாடிக்கையாளர்களுக்கு**

உங்கள் கருசரு சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்குச் செல்லுங்கள். அங்குள்ள எமது அலுவலர்கள் கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆவணப் படிவங்களை உங்களுக்கு வழங்குவார்கள். நீங்கள் அவற்றை வாசித்து நிரப்பிக் கையளிக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய தேசிய அடையாள அட்டையை/கடவுச்சீட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தை மட்டுமே கொண்டுவர வேண்டும்.

உங்கள் தற்போதய வசிப்பிட முகவரி, தேசிய அடையாள அட்டையிலுள்ள உங்கள் தபால் முகவரியிலிருந்து வேறுபடின், தற்போதய வசிப்பிட முகவரியை ஊர்ஜிதம் செய்யக்கூடிய சான்று ஆவணங்கள் (பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல்கள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**தற்போதய வாடிக்கையாளர்களுக்கு**

வங்கியுடன் ஏற்கனவே தொடர்பை வைத்திருக்கும் வாடிக்கையாளர் என்ற முறையில், நீங்கள் உங்களுக்கு வசதியான DFCC வங்கிக் கிளை ஒன்றிற்குச் சென்று, தற்போதய வாடிக்கையாளர்களுக்கான கணக்கு ஆரம்பப் படிவத்தைப் பெற்று, அதனை நிரப்பிக் கையளிக்கலாம்.

உங்கள் விபரங்கள் நீங்கள் முன்பு வழங்கிய விபரங்களைவிட வேறுபட்டிருந்தால், பதிவேடுகளை இற்றைப்படுத்துவதற்காகப் புதிய விபரங்களைத் தெரிவிக்கும்படி எமது அலுவலர்கள் உங்களைக் கேட்பார்கள்.

### 1.2 ஆரம்ப வைப்பின் பெறுமதி

கருசரு சேமிப்புக் கணக்கிற்கான குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு இ.ரூ.1,000/- ஆகும்.

### 1.3 பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் மற்றும் மேலதிக வெகுமதிகள்

கருசரு சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்படும் வேளையில் அதனுடன் தொடர்புடைய பெறுமதி சேர்க்கப்பட்ட பல்வேறு மேலதிக சேவைகளைச் சேர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்படும்.

- இலத்திரனியல் வங்கிச் சேவைகள்
- இலத்திரனியல் விபரக்கூற்றுச் சேவை
- SMS அறிவித்தல்கள்
- வேர்ச்சுவல் வொலட்

மருத்துவ வசதி, சுப்பர் மார்க்கட் கொள்வனவுகள், டேட்டா அட்டைகள், ஸ்பா, தொலைக்காட்சிச் சேவை என்பன மேலதிக வெகுமதிச் சேவைகளாக இ.ரூ.1,000.00 முதல் இ.ரூ. 12,000.00 வரையான பெறுமதியில் உங்களுக்குக் கிடைக்கும்.

நீங்கள் எம்மிடம் பல கருசரு கணக்குகளை வைத்திருந்தால், ஆகக்கூடிய சராசரி மீதியைக் கொண்ட கணக்கு மாத்திரமே மேலதிக வெகுமதிகளுக்கான தகுதியைப் பெறும்.

கருசரு சேமிப்புக் கணக்கு வைப்பாளர்கள் விசேட கடன் அட்டை வழங்கல்கள், இலவச SMS அறிவிப்புகள், இலவச ஒன்லைன் வங்கிச் சேவை, வேர்ச்சுவல் வொலட் போன்ற வசதிகளையும் பெறுவார்கள்.

**1.4 உங்கள் கணக்கை முகாமைத்துவம் செய்தல்**

நீங்கள் உங்களுடைய கருசரு சேமிப்புக் கணக்கைத் தனியாக (தனிக் கணக்கு) அல்லது இலங்கையில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவருடன் (அல்லது பலருடன்) சேர்ந்து கூட்டாக ஆரம்பிக்கலாம்.

கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், பிரதான கணக்கு வைப்பாளர் மட்டுமே வெகுமதிகளுக்கான தகுதியைப் பெறுவார். எனினும், அவர் விரும்பினால் இந்த உரிமையைக் கைவிட்டு, வெகுமதிகள் பெறும் வாய்ப்பைக் கூட்டுக் கணக்கு வைப்பாளர் ஒருவருக்குக் கையளிக்க முடியும்.

- **பண வைப்புகள்**

உங்கள் கணக்கில் பணத்தை வைப்புச் செய்ய வேண்டுமாயின், எந்தவொரு DFCC வங்கிக் கிளையிலும் கிடைக்கும் பண வைப்புச் சீட்டை நிரப்பி, அதனையும் பணத்தையும் உரிய கருமபீடத்தில் கையளிக்க வேண்டும்.

மூன்றாம் தரப்பினரும் இவ்வாறு உங்கள் கணக்கில் பணத்தை வைப்புச் செய்ய முடியும். மூன்றாம் தரப்பினர் ஒருவர் ஒரே தடவையில் அல்லது பல்தொகுதிகளில் இ.ரூ.200,000.00க்கு மேற்பட்ட தொகையை அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத்தை வைப்புச் செய்யும்போது, வங்கியானது அவரது பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் கோரும். வைப்பின் நோக்கம், வைப்புப் பணம் எங்கிருந்து பெறப்பட்டது ஆகிய விபரங்களை அந்த மூன்றாம் தரப்பினர் தெரிவிப்பது முக்கியமாகும்.

வங்கியினால் வழங்கப்பட்ட உங்கள் பற்று அட்டையைப் பயன்படுத்தி, வங்கியின் பண வைப்பு இயந்திரங்கள் (CDM) மூலமும் நீங்கள் உங்கள் சேமிப்புக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்யலாம். உங்களுக்கான நாளாந்த வைப்பு உச்சவரம்புத் தொகை இ.ரூ.500,000/- (ஐந்நூறு ஆயிரம்)) ஆகும். பிரிமியர் வாடிக்கையாளர்கள் ஒரு தடவையில் ஆகக்கூடியதாக இ.ரூ.500,000/- (ஐந்நூறு ஆயிரம்) என்ற அடிப்படையில் தினமும் இ.ரூ.5,000,000/- (ஐந்து மில்லியன்) வரை வைப்புச் செய்ய முடியும்.

- **காசோலை வைப்புகள்**

வழமையாக, உங்கள் சேமிப்புக் கணக்குகளுக்கான காசோலை வைப்புகள் அனுமதிக்கப்படுவதில்லை. அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் 1927ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பரிவர்த்தனைப் பத்திரங்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் வங்கிக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுவதில்லை என்பதே இதற்குக் காரணம்.

எனினும், குறிப்பிட்டதொரு கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கென வாடிக்கையாளரின் பெயர் மற்றும் கணக்கு இலக்கம் சகிதம் வங்கியின் பெயரில் உங்களால் வரையப்பட்ட காசோலை வங்கியின் தற்றுணிபிற்கேற்ப மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

உதாரணம்: முகாமையாளர் - DFCC வங்கி o/a (வாடிக்கையாளரின் பெயர்)

- **பண மீளப்பெறுதல்கள்**

தன்னியக்க டெலர் இயந்திர (ATM) வலையமைப்பின் மூலம் அல்லது கிளை வலையமைப்பின் மூலம் உங்கள் சேமிப்புக் கணக்கிலிருந்து பண மீளப்பெறுதல்களைச் செய்ய முடியும்.
கிளை வலையமைப்பின் மூலம் உங்கள் சேமிப்புக் கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெற விரும்பினால், ஏதேனுமொரு DFCC வங்கிக் கிளைக்கு நேரில் செல்ல வேண்டும். முறைப்படி நிரப்பப்பட்ட மீளப்பெறுகைச் சீட்டையும் உங்கள் தேசிய அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க வேறொரு அடையாள ஆவணத்தையும் நீங்கள் கருமபீடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
ATM வலையமைப்பின் ஊடாக உங்கள் சேமிப்புக் கணக்கிலிருந்து பணத்தை மீளப்பெற விரும்பினால், நீங்கள் DFCC வங்கியின் அல்லது வேறொரு வங்கியின் ATMக்கு உங்கள் பற்று அட்டை சகிதம் செல்ல வேண்டும். அங்கே உங்கள் பற்று அட்டை இலக்கத்தைப் பதிந்த பின், ATM தெரிவிக்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.
ஒரு கூட்டுக் கணக்கைப் பொறுத்தவரையில், செயற்படுத்தும் அறிவுறுத்தல் ''இருவரும் கையொப்பமிட வேண்டும்'' என்றிருந்தால், கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்கு இரு தரப்பினரும் வங்கிக் கிளையில் சமுகமளிப்பது அவசியமாகும்.
செயற்படுத்தும் அறிவுறுத்தல் ''எவரேனுமொருவர் கையொப்பமிடலாம்'' என்றிருந்தால், ஒரு தரப்பின் கையொப்பத்துடன் கொடுக்கல் வாங்கலைச் செய்யலாம்.
உங்கள் கூட்டுச் சேமிப்புக் கணக்கிற்கெனப் பெறப்பட்ட பற்று அட்டையைப் பயன்படுத்தியும் நீங்கள் பண மீளப்பெறுதல்களைச் செய்ய முடியும்.
.

- **மூன்றாம் தரப்பினால் மீளப்பெறப்படுதல்**

உங்கள் கணக்கிலிருந்து மூன்றாம் தரப்பினரால் பணம் மீளப்பெறப்படுதல் அனுமதிக்கப்பட மாட்டாது. தவிர்க்க முடியாத விசேட நிலைமைகளில் வங்கியின் தனித் தற்றுணிப்பிற்கேற்ப மாத்திரம் அத்தகைய மீளப்பெறுதல்கள் அனுமதிக்கப்படலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில், உங்களால் அல்லது உங்கள் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவரால் வேண்டுகோள் கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படுவது அவசியம். மீளப்பெறுதல் சீட்டைக் கொண்டுவருபவரின் கையொப்பம், அவரது அடையாளம் என்பன அக் கடிதத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

- **எழுத்தறிவற்ற/பலவீனமான ஆட்களினால் மீளப்பெறப்படுதல்**

நீங்கள் உடல்நலம் அற்றவராகவும் மீளப்பெறுதல் சீட்டில் கையொப்பமிட முடியாதவராகவும் இருந்தால், ஒரு சாட்சி அவசியம் என்பதுடன், உங்கள் நிலைமை ஒரு வைத்தியரினால் உறுதிப்படுத்தப்படவும் வேண்டும். கொடுக்கல் வாங்கலை நீங்கள் புரிந்துகொண்டுள்ளீர்கள் என்பதையும் நீங்கள் சாதாரண மனநிலையில் இருக்கிறீர்கள் என்பதையும் அவர் ஊர்ஜிதம் செய்ய வேண்டும்.

அத்தகைய சந்தர்ப்பங்களில், மீளப்பெறப்படும் பணமானது நெருங்கிய குடும்ப உறுப்பினர் ஒருவரிடம் கையளிக்கப்படும். அந்த நபர் தனது அடையாளத்தை நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டையையும் பிறப்புச் சான்றிதழ் அல்லது விவாகச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

**1.4 கணக்குப் புத்தகங்கள்**
நீங்கள் வேறு விதமாக வேண்டுகோள் விடுக்காவிட்டால், உங்கள் சகல கணக்குகள் தொடர்பாகவும் உங்களுக்கு இலத்திரனியல் விபரக்கூற்றுகளை வழங்குவதே வங்கியின் தற்போதய நடைமுறையாகும்.

தனிப்பட்டவர்களின் சேமிப்புக் கணக்குகள் அல்லது கூட்டுக் கணக்குகள் தொடர்பில் விசேட வேண்டுகோளின் பேரில் மாத்திரமே கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படும். கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், செயற்படுத்தல் அறிவுறுத்தல்கள் ''இருவரும் கையொப்பமிட வேண்டும்'' என்றிருந்தால், அத்தகைய கணக்குகளுக்குக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக விபரக்கூற்றுகள் வழங்கப்படும். ''ஒருவர் கையொப்பமிட வேண்டும்'' என்ற செயற்பாட்டு அறிவுறுத்தலைக் கொண்ட கூட்டுக் கணக்குகளுக்குக் கணக்குப் புத்தகம் வழங்கப்படலாம்.

■ **கணக்குப் புத்தகங்களைப் பயன்படுத்துதல்**
பணத்தை வைப்புச் செய்வதற்காக அல்லது மீளப்பெறுவதற்காக நீங்கள் உங்களுடைய கணக்குப் புத்தகத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை. ஆனால், இற்றைப்படுத்தும் நோக்கங்களுக்காகக் கணக்குப் புத்தகம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

■ **கணக்குப் புத்தகத்தின் தொலைவு பற்றி அறிவித்தல்**
உங்கள் கணக்குப் புத்தகம் தொலைந்து, அது பற்றி அறிவிப்பதற்காக நீங்கள் வங்கிக் கிளைக்குச் செல்லும்போது, உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கும் உங்கள் கணக்கு மீதியை ஊர்ஜிதம் செய்வதற்கும் வங்கிக் கிளையிலுள்ள ஓர் அலுவலர் உங்களை விசாரிப்பார்.

கணக்குப் புத்தகத்தின் தொலைவு பற்றி அறிவிப்பதற்கு நீங்கள் கடிதம் ஒன்றை அனுப்பினால், வங்கியிலுள்ள ஓர் அலுவலர் உங்கள் கையொப்பத்தைச் சரிபார்த்து உறுதிசெய்வார். உங்கள் கணக்கு ஒரு கூட்டுக் கணக்காக இருந்தால், கணக்குப் புத்தகத்தின் தொலைவு பற்றிய எழுத்துமூல அறிவித்தலைக் கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் அனைவரும் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தொடர்பான விதிப்பனவுகளுக்கு எமது வலைத்தளத்திலுள்ள விதிப்பனவுகள் பக்கத்தைப் பார்க்கவும்.

**1.5 கருசரு சேமிப்புக் கணக்கிற்கான வட்டி**
உங்கள் கணக்கிலுள்ள பணத்திற்கான வட்டியானது தேறிய தினசரி மீதியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு, மாதத்தின் இறுதி வேலை நாளில் கணக்கில் வரவு வைக்கப்படும்.

உங்கள் கணக்கு குறைந்தபட்ச மீதி தேவைப்படும் கணக்காக இருந்தால், அக் குறைந்தபட்ச மீதி பேணப்படாத பட்சத்தில் வட்டியெதுவும் வழங்கப்பட மாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு, நீங்கள் தெரிவுசெய்த கணக்கு வகைக்கான விபரங்களை எமது வலைத்தளத்தில் பார்க்கவும்.

**1.6 முதலீடுகளுக்கான நியமன வசதி**
உங்கள் சேமிப்புக் கணக்கிற்கென இன்னுமொருவரை நியமிக்க நீங்கள் விரும்பினால், கணக்கை ஆரம்பிக்கும் வேளையில் அல்லது ஆரம்பித்த பின் அவ்வாறு செய்யலாம். நியமிக்கப்படுவரின் பெயர், அவருக்குக் கிடைக்க வேண்டிய சதவீதம் மற்றும் கணக்கு விபரங்கள் நியமனப் படிவத்தில் நிரப்பப்பட வேண்டும். நீங்கள் செல்லும் கிளையிலுள்ள எமது அலுவலர் ஒருவருடன் இது சம்பந்தமாகப் பேசுங்கள். அவர் உங்களுக்கு உதவுவார்.

**1.7 விபரக்கூற்றுகள்**

சூழலுக்கு நலமான முறை என்பதால் இலத்திரனியல் விபரக்கூற்றுகளை ஊக்குவிக்கும் DFCC வங்கி, இலத்திரனியல் விபரக்கூற்றுகளுக்காகத் தம்மைப் பதிவு செய்துகொள்ளும்படி வாடிக்கையாளர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. நீங்கள் கணக்கை ஆரம்பித்த வேளையில் வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கே இலத்திரனியல் விபரக்கூற்றுகள் அனுப்பப்படும். அவற்றைப் பெறுவதற்கு அவசியமான தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN) வங்கியினால் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இந்த இலக்கத்தை நீங்கள் பாதுகாப்பாக வைத்திருந்து உங்கள் விபரக்கூற்றுகளைப் பார்வையிடலாம்.

நீங்கள் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், காகிதத்தில் அச்சிடப்பட்ட விபரக்கூற்றுகளும் வழங்கப்படும். கணக்கு ஆரம்பிக்கப்பட்ட வேளையில் நீங்கள் வழங்கிய தபால் முகவரிக்கு அவை மாதாமாதம் இலவசமாக அனுப்பப்படும்.

அவ்வப்போது அல்லது தொடர்ச்சியாக, ஒரு மாதத்திற்குக் குறைந்த கால இடைவெளிகளில் விபரக்கூற்றுக்களைப் பெற விரும்பினால், வங்கியின் விதிப்பனவுகள் அட்டவணைக்கேற்ப ஒரு கட்டணம் அறவிடப்படும்.

மாதாந்த இடைவெளிகளுக்கு மேலதிகமாக எப்போதாவது ஒரு தடவை விபரக்கூற்று தேவைப்பட்டால், அதற்கென வேண்டுகோள் கடிதம் ஒன்றைச் சமா்ப்பிக்க வேண்டும். விதிப்பனவு அட்டவணைக்கேற்ப அதற்குக் கட்டணம் அறவிடப்படும்.

விபரங்களுக்கு வாடிக்கையாளா் விதிப்பனவுகள் அட்டவணையைப் பார்க்கவும்.

**2. சிரேஷ்ட பிரஜைகளுக்கான DFCC வங்கி நிலையான வைப்புகள்**

**2.1 நிலையான வைப்புக் கணக்குகள் பற்றி**

நிலையான வைப்பு என்பது உங்கள் பணத்தை ஒரு குறுகிய காலத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்கு முதலீடு செய்ய இடமளிக்கும் பாதுகாப்பான கணக்காகும். குறைந்தபட்சம் 1 மாத்திலிருந்து கூடியபட்சமாக 10 ஆண்டுகள் வரை உங்கள் பணத்தை முதலீடு செய்யும் சுதந்திரத்தை DFCC நிலையான வைப்பு உங்களுக்கு வழங்குகின்றது.

சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டியைவிடக் கூடுதலான வட்டி நிலையான வைப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும். நிலையான வைப்புகளுக்கான வட்டியானது வைப்புக் காலத்திற்கேற்ப வேறுபடும். சம்பாதிக்கப்படும் வட்டியை முதிர்ச்சியில் அல்லது மாதாந்தம், காலாண்டு,, அரையாண்டு, வருடாந்தம் ஆகிய கிரமமான கால இடைவெளி ஒன்றில் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

**2.2 சிரேஷ்ட பிரஜைகள் நிலையான வைப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான தகுதிகள்**

- இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும்
- 60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருக்க வேண்டும்.

விசேட குறிப்பு: நீங்கள் உங்களுடைய நிலையான வைப்புக் கணக்கைத் தனியாக (தனிக் கணக்கு) அல்லது இலங்கையில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவருடன் (அல்லது பலருடன்) சேர்ந்து கூட்டாக ஆரம்பிக்கலாம்.

**புதிய வாடிக்கையாளர்களுக்கு**

உங்கள் நிலையான வைப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்குச் செல்லுங்கள். கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆவணப் படிவங்களை அங்குள்ள எமது அலுவலர்கள் வழங்குவார்கள். நீங்கள் அவற்றை வாசித்து நிரப்பிக் கையளிக்க வேண்டும். நீங்கள் உங்கள் தேசிய அடையாள அட்டையை/கடவுச்சீட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுவந்தால் போதுமானது.

திரளும் வட்டியை வரவு வைப்பதற்கு ஏதுவாக, நிலையான வைப்புடன் ஒரு சேமிப்புக் கணக்கை அல்லது நடைமுறைக் கணக்கையும் நீங்கள் ஆரம்பிப்பது நல்லதென நாம் ஆலோசனை கூறுகின்றோம்.

**தற்போதய வாடிக்கையாளர்களுக்கு**

வங்கியுடன் ஏற்கனவே தொடர்பை வைத்திருக்கும் வாடிக்கையாளர் என்ற முறையில், நீங்கள் உங்களுக்கு வசதியான DFCC வங்கிக் கிளை ஒன்றிற்குச் சென்று, இந்த விடயம் தொடர்பில் விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள அலுவலர் ஒருவருடன் பேசுங்கள். உங்கள் தேவைகளையும் முதிர்ச்சிக் காலம், வைப்பின் பெறுமதி, வட்டி சேர்ப்புக்கான அறிவுறுத்தல்கள் போன்ற விபரங்களையும் படிவத்தில் நிரப்ப வேண்டும்.

நீங்கள் ஏற்கனவே எம்மிடம் வைத்திருக்கும் ஒரு சேமிப்புக் கணக்கில் அல்லது நடைமுறைக் கணக்கில் உள்ள பணத்தை நிலையான வைப்பில் வைப்புச் செய்வதற்கு உத்தேசித்திருந்தால், அக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட தொகைக்கான பணத்தைப் பரிமாற்றம் வேண்டும். அவ்வாறு இல்லையெனின், நிலையான வைப்பில் பணத்தை முதலீடு செய்வதற்குப் பின்வரும் முறைகளில் ஒன்றைப் பயன்படுத்தலாம்:

- நேரடிப் பண வைப்பு
- காசோலை மூலமான வைப்பு
- கொடுப்பனவுக் கட்டளைகள்
- உள்ளகப் பணப் பரிமாற்றங்கள்
- SLIP/ CEFT/ RTGS பரிமாற்றங்கள் (சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளுக்கு)

தேவைப்படின், மேற்குறிப்பிட்ட வழிமுறைகளைக் கூட்டாகப் பயன்படுத்தியும் நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கான பணத்தை நீங்கள் செலுத்தலாம். ஆயினும், முதலீட்டிற்கான மொத்தப் பணமும் உங்கள் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கில் தேறிய பின்பும், அத் தொகையானது நிலையான வைப்பிற்கு மாற்றப்பட்டட பின்பு மாத்திரமே நிலையான வைப்புக் கணக்கு செயற்படுத்தப்படும்.

**2.3 நிலையான வைப்பு முதலீடுகளுக்கான நியமன வசதி**

உங்கள் நிலையான வைப்புக் கணக்கிற்கென இன்னுமொருவரை நியமிக்க நீங்கள் விரும்பினால், கணக்கை ஆரம்பிக்கும் வேளையில் அல்லது ஆரம்பித்த பின் அவ்வாறு செய்யலாம். நியமிக்கப்படுவரின் விபரங்கள் அவருக்குக் கிடைக்க வேண்டிய சதவீதம் மற்றும் உங்கள் கணக்கு விபரங்கள் நியமனப் படிவத்தில் நிரப்பப்பட வேண்டும். நீங்கள் செல்லும் கிளையிலுள்ள எமது அலுவலர் ஒருவருடன் இது சம்பந்தமாகப் பேசுங்கள். அவர் உங்களுக்கு உதவுவார்.

**2.4 நிலையான வைப்புக் கணக்கின் தனித்துவமான சிறப்பம்சங்கள்**

ஒரு சிரேஷ்ட பிரஜை என்ற முறையில், சாதாரண நிலையான வைப்பிற்குக் கிடைப்பதைவிட கூடுதலான வட்டி வீதங்களை நீங்கள் பெறுவீர்கள். இதோ, இத் திட்டத்தின் வேறு சில சிறப்பம்சங்கள்:

- நிலையான வைப்பிற்குரிய குறைந்தபட்ச வைப்புத் தொகை இ.ரூ.10,000.00
- ஆகக்கூடிய முதலீடு சம்பந்தமான உச்சவரம்பு எதுவும் கிடையாது
- வைப்புத் தொகை, காலம், வட்டி வீதம் ஆகிய விபரங்களை உள்ளடக்கிய நிலையான வைப்புச் சான்றிதழ் உங்களுக்கு வழங்கப்படும்

- இம் முதலீட்டுத் திட்டம் 1 மாதம் முதல் 10 ஆண்டுகள் வரைப்பட்ட ஒரு நிலையான ஒப்பந்தக் காலத்தைக் கொண்டது.
- நிலையான வைப்புக் கணக்கை ஆரம்பிக்கும் வேளையில் முதிர்ச்சி அறிவுறுத்தல்களைத் தெரிவு செய்யலாம். முதலீட்டை மாத்திரம் அல்லது முதலீட்டையும் வட்டியையும் சேர்த்து மீள முதலீடு செய்வது பற்றி நீங்கள் தீர்மானிக்கலாம். திரண்ட வட்டித் தொகையை மற்றுமொரு வங்கிக் கணக்கிற்கு அனுப்பும்படியும் நீங்கள் அறிவுறுத்தல் வழங்கலாம்.
- வைப்புச் சான்றிதழைப் பிணையாக வைக்கவோ அல்லது இன்னுமொருவருக்குக் கைமாற்றவோ முடியாது.
- உங்கள் நிலையான வைப்பு முதிர்ச்சியடைந்ததும் உரிய பணத் தொகையை உங்களுக்கு வசதியான எந்தவொரு DFCC கிளையிலிருந்தும் மீட்டுக்கொள்ளலாம்.
- முதிர்ச்சியடைந்த நிலையான வைப்பின் முதலீட்டை மட்டும் அல்லது முதலீட்டையும் அதனுடன் சேர்ந்த வட்டியையும் ஒரு மூன்றாம் தரப்பிற்கு மாற்ற நீங்கள் விரும்பினால், சம்பந்தப்பட்ட தரப்பிற்கான கொடுப்பனவுக் கட்டளை ஒன்றை ஒழுங்குசெய்யும்படி நீங்கள் வங்கிக்கு அறிவுறுத்தல் வழங்கலாம். இது தொடர்பான கட்டணங்களை அறிய, எமது வலைத்தளத்திலுள்ள விதிப்பனவுகள் பக்கத்தைப் பார்க்கவும்.
- உங்கள் நிலையான வைப்பு முதிர்ச்சி அடையும்போது, நீங்கள் வங்கிக்கு வழங்கிய செயற்படுத்தல் அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாக அனுசரிக்கும் முறையிலேயே பணம் விடுவிக்கப்படும்.
- நிலையான வைப்பை ஆரம்பித்த வேளையில் வழங்கப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தல்களில் ஏதேனும் திருத்தம் செய்ய நீங்கள் விரும்பினால், வைப்பு முதிர்ச்சியடைவதற்கு முன்னர் அவ்வாறு செய்யலாம்.

### 2.5 நிலையான வைப்புக் கணக்குகளின் பேரில் திரளும் வட்டி

உங்கள் நிலையான வைப்புக்கான வட்டி, நடைமுறையிலுள்ள சந்தை வீதங்களுக்கும் காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் கொள்கை வீத மாற்றங்களுக்கும் அமைவாக வங்கியினால் தீர்மானிக்கப்படும். வட்டியானது தினசரி அடிப்படையில் கணிக்கப்பட்டு, நிலையான வைப்பின் முதிர்ச்சியின்போது அல்லது நீங்கள் கேட்டுக்கொண்ட வட்டிக் கொடுப்பனவு இடைவெளிகளில் வரவு வைக்கப்படும்.

தற்போதய வட்டி வீதங்களை அறிந்துகொள்ள, www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் பிரவேசிக்கவும்.

### 2.6 நிலையான வைப்புக் கணக்கின் மீதான வட்டிக் கொடுப்பனவு

வட்டிக் கொடுப்பனவு இடைவெளியானது மாதாந்தம், காலாண்டுதோறும், அரையாண்டுதோறும், வருடாந்தம், முதிர்ச்சியில் என்ற முறைகளிலிருந்து எதுவென்பதைத் தெரிவுசெய்ய உங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

நிலையான வைப்பிற்கு முதிர்ச்சியில் வழங்கப்படும் வட்டி வீதத்தைப் பார்க்கிலும் மாதாந்த, காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த வட்டிக் கொடுப்பனவுக்கான வட்டி வீதங்கள் குறைவாக இருக்கும்.

முதிர்ச்சியில் அல்லாது வேறொரு இடைவெளியில் வட்டியைப் பெறுவதற்கு நீங்கள் தெரிவு செய்தால், உங்கள் வட்டிச் சம்பாத்தியத்தை வரவு வைப்பதற்கு வசதியாக சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பது நன்மையளிக்கும்.

உங்கள் வட்டிச் சம்பாத்தியம் வேறொரு வங்கியில் பேணப்படும் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டுமென நீங்கள் விரும்பினால், வங்கிகளுக்கு இடையிலான பணப் பரிமாற்ற வசதியைப் பயன்படுத்தி அவ்வாறு செய்ய முடியும்.

### 2.7 நிலையான வைப்பின் முதிர்ச்சி

உங்கள் நிலையான வைப்பு முதிர்ச்சிக் காலத்தை அடைந்ததும், அதிலுள்ள பணத்தை மீள முதலீடு செய்ய அல்லது வைப்புக் கணக்கை ஆரம்பித்த நேரத்தில் வழங்கிய செயற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கேற்ப அதனை

இடமாற்றம் செய்ய மற்றும் மீளப்பெற உங்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். உங்களுக்கான விருப்பத்தேர்வுகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

■ பணத்தை மீள முதலீடு செய்தல்

நீங்கள் உங்களது முதலீட்டுத் தொகையையும் அதனுடன் சேர்ந்த வட்டியையும் உங்களுக்கு விருப்பமான இன்னுமொரு காலப்பகுதிக்கு மீள முதலீடுசெய்யலாம். அல்லது முதலீட்டுத் தொகையை மாத்திரம் உங்களுக்கு விருப்பமான இன்னுமொரு காலப்பகுதிக்கு மீள முதலீடு செய்துவிட்டு, வட்டித் தொகையை உங்கள் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கிற்கு மாற்றலாம் அல்லது மீளப்பெறலாம்.

அவசியமான கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்கு, நீங்கள் வங்கிக்கு எழுத்துமூல அறிவுறுத்தலை வழங்குவதுடன், கணக்கு ஆரம்பிக்கப்பட்டபோது வழங்கப்பட்ட நிலையான வைப்புச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

■ பணத்தை இடமாற்றம் செய்தல் மற்றும் மீளப்பெறுதல்

நிலையான வைப்பு முதிர்ச்சி அடைந்ததும், உங்கள் முதலீட்டையும் அதனுடன் சேர்ந்த வட்டியையும் நீங்கள் இடமாற்றம் செய்து மீளப்பெற முடியும்.

அவசியமான கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்கு, நீங்கள் வங்கிக்கு எழுத்துமூல அறிவுறுத்தலை வழங்குவதுடன், கணக்கு ஆரம்பிக்கப்பட்டபோது வழங்கப்பட்ட நிலையான வைப்புச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

■ தன்னியல்பான புதுப்பித்தல்

நீங்கள் சரியான அறிவுறுத்தல் எதையும் வங்கிக்கு வழங்காதிருந்தால், உங்கள் நிலையான வைப்பு முதிர்ச்சி அடைந்ததும் முதலீட்டுத் தொகையும் அதனுடன் சேர்ந்த வட்டியும் உங்கள் மூல நிலையான வைப்பினைப் போன்ற இன்னுமொரு காலப்பகுக்கு வங்கியினால் புதுப்பிக்கப்படும்.

நீங்கள் கணக்கை ஆரம்பித்த வேளையில் உங்களுக்கு வழங்கப்பட்ட நிலையான வைப்புச் சான்றிதழ், பணத்தை மீளப்பெறும் நேரத்தில் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படுவது கட்டாயமல்ல.

**2.8 நிலையான வைப்புக்களை முதிர்ச்சிக்கு முன் மீளப்பெறுதல்**

நீங்கள் வங்கிக்கு எழுத்துமூல வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், உங்கள் நிலையான வைப்பை முதிர்ச்சிக்கு முன்பே பணமாக்க முடியும். இது அனுமதிக்கப்படுகின்றபோதிலும், முதலீடானது ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரை நடைமுறையில் இருக்கவில்லை என்பதால் உங்களுக்கான வட்டி குறைக்கப்படும்.

உங்கள் நிலையான வைப்பு வேறு ஒருவருடன் அல்லது பலருடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்ட கூட்டுக் கணக்காக இருப்பதுடன், ‘‘அனைவரும் கையொப்பமிட வேண்டும்’’ என்ற செயற்பாட்டு அறிவுறுத்தலையும் கொண்டிருந்தால், பணத்தை மீளப்பெறும்/இடமாற்றம் செய்யும் சந்தர்ப்பத்தில் உங்கள் தேவையை நிறைவேற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் வங்கியில் சமுகமளிப்பது கட்டாயமாகும்.

உங்கள் கூட்டுக் கணக்கு ‘‘எந்தவொரு தரப்பும் கையொப்பமிடலாம்’’ என்ற செயற்பாட்டு அறிவித்தலைக் கொண்டிருந்தால், ஒரு தரப்பின் கையொப்பத்துடன் பணத்தை மீளப்பெறலாம்.

**2.9 நிலையான வைப்பிலுள்ள பணத்தை இடம்மாற்றும் மற்றும் மீளப்பெறும் முறைகள்**

நிலையான வைப்பிலிருந்து எடுக்கப்பட்டு மீளப்பெறப்படும் பணத்தை வேறு வங்கிகளுக்கு இடமாற்றம் செய்ய விரும்பினால், அதற்கென எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றை அல்லது பொது வேண்டுகோள் படிவத்தை வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இச் செயற்பாடு வங்கி அறவீடுகளுக்கு உட்படும்.

விதிப்பனவுகளை அறிந்துகொள்ள www.dfcc.lkஎன்ற எமது வலைத்தளத்தில் பிரவேசிக்கவும்.

- SLIPS மூலம் வேறு வங்கிகளுக்கான பணப் பரிமாற்றம்
- வங்கி அறவீடுகளுக்கு உட்பட்டதாக, கொடுப்பனவுக் கட்டளைகள் வழங்கப்படலாம். கொடுப்பனவுக் கட்டளையானது "கணக்குப் பெறுநர்" என்று குறுக்குக்கோடு இடப்பட்ட உங்கள் பெயரில் வரையப்படும்.

**2.11 முதிர்ச்சியில் நிலையான வைப்பு விதிமுறைகளின் திருத்தம்**

உங்கள் நிலையான வைப்புக் கணக்கு முதிர்ச்சியடைவதற்கு முன்னர் வங்கிக்கு எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றை விடுப்பதன் மூலம் நீங்கள் உங்களுடைய நிலையான வைப்புக் கணக்கிற்கான முதிர்ச்சி அறிவுறுத்தல்களை மாற்றும்படி கேட்கலாம். அவ்வாறு கோரப்படும் மாற்றங்கள் நிலையான வைப்பின் மூல முதிர்ச்சித் திகதியில் செயற்படுத்தப்படும் என்பதைக் கவனிப்பது முக்கியமாகும்.

மாற்றங்களைச் செய்யும்போது, வங்கியானது உங்கள் தற்போதய நிலையான வைப்புக் கணக்கை மூடிவிட்டு, புதிய கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டியிருக்கும்.

**2.12 நிலையான வைப்புகளின் பேரில் கடன் வழங்குதல்**

நிலையான வைப்பிலுள்ள தொகையின் 90 சதவீதம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டதாக, நீங்கள் உங்களுடைய நிலையான வைப்புக் கணக்கின் பேரில் கடனை அல்லது மேலதிகப் பற்றைப் பெற முடியும். ஒவ்வொரு திட்டத்திற்கும் ஏற்புடைய நிபந்தனைகளுக்கு அமைவாகவே இக் கடன் வழங்கப்படும்.

இக் கடன் வசதியைப் பெறுவதற்கு, நீங்கள் விண்ணப்பப் படிவம் ஒன்றை முறைப்படி நிரம்புவதுடன் எதிரீட்டுக்கான கடிதம் ஒன்றையும் வழங்க வேண்டும்.

**2.13 பாத்தியத்தின் கீழ் நிலையான வைப்பின் முன்கூட்டிய மூடுதல்/மூடுதல்**

நீங்கள் உங்களுடைய நிலையான வைப்புக் கணக்கின் பேரில் ஏற்கனவே ஒரு கடனை அல்லது மேலதிகப் பற்றைப் பெற்றிருக்கும் பட்சத்தில், நிலையான வைப்பிலுள்ள பணத்தை மீளப்பெற விரும்பினால், முதல் நடவடிக்கையாக உங்கள் தேவையைக் குறிப்பிட்டு எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றை வங்கிக்குச் சமர்ப்பிப்பது அவசியம்..

உங்கள் நிலையான வைப்பை மீளப்பெறுவதற்கு முன்னர், கடன் அல்லது மேலதிகப் பற்றுக்காக பிணை என்ற நிலையிலிருந்து உங்கள் நிலையான வைப்பு செயலிழந்துவிடும். எனவே, நீங்கள் பெற்ற ஏதேனும் கடனின் அல்லது மேலதிகப் பற்றின் நிலுவைகளும் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் அறவீடுகளும் உங்கள் நிலையான வைப்பிலிருந்து கழிக்கப்படும்.

**2.14 எம்முடன் தொடர்புகொள்ளும் முறை**

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது **info@dfccbank.com** என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். எமது கிளை ஒன்றிற்கும் நீங்கள் விஜயம் செய்யலாம். கிளைகளின் விபரங்களை எமது வலைத்தளத்தில் பாருங்கள்.